பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

09 12 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- விமான சேவைகளை ரத்து செய்தது தொடர்பாக இண்டிகோ நிறுவனம் அளித்துள்ள விளக்கம் குறித்து ஆராய்ந்து வருவதாக விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக 4 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை பார்வையாளர்களாக தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.
- தமிழகத்திற்கு டிசம்பர் மாதம் வழங்கப்பட வேண்டிய 7 புள்ளி மூன்று ஐந்து டி.எம்.சி. நீரை கர்நாடக அரசு திறந்துவிடுவதை உறுதி செய்ய வேண்டும் என்று காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.
- மாணவர்களின் வேலைவாய்ப்புக்கு வழிவகுக்கும் புதிய பாடப்பிரிவுகளை தொடங்க கருத்துகளை சமர்ப்பிக்குமாறு கல்லூரி முதல்வர்களை அமைச்சர் திரு. கோவி. செழியன் கேட்டுக்கொண்டுள்ளார்.
- உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

விமான சேவைகளை ரத்து செய்தது தொடர்பாக இண்டிகோ நிறுவனம் அளித்துள்ள விளக்கம் குறித்து ஆராய்ந்து வருவதாக விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து டிடி நியூஸ் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அவர், பயணிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தியதை கருத்தில் கொண்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

இண்டிகோ நிறுவனம் தற்போது 2 ஆயிரத்து 200 வழித்தடங்களில் விமானங்களை இயக்கி வரும் நிலையில் தற்போது அதைக் குறைத்து மற்ற விமான சேவை நிறுவனங்களுக்கு அளிக்கப்படுவது குறித்து அரசு திட்டமிட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

விமான சேவை நாளை முதல் முழுவதுமாக இயல்பு நிலைக்கு திரும்பும் என்று அவர் தெரிவித்தார்.

பயணிகளின் பாதுகாப்பு குறித்து அரசு கண்காணிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

இதற்கிடையே இச்சம்பவம் குறித்து விளக்கம் அளித்துள்ள இண்டிகோ நிறுவனம், விமான சேவை ரத்து செய்யப்பட்டதால் பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்திற்காக மன்னிப்பு கோருவதாக கூறியுள்ளது.

எதிர்பாராத பல்வேறு காரணங்களால் விமான சேவை ரத்து செய்யப்பட்டதாக அது தெரிவித்துள்ளது.

இந்நிலையில் விமானங்கள் ரத்து செய்யப்பட்டதை அடுத்து இதுவரை 827 கோடி ரூபாய் பயணக் கட்டணம் திரும்ப வழங்கப்பட்டுள்ளதாக இண்டிகோ நிறுவனம் கூறியுள்ளது.

நேற்று ஆயிரத்து 800க்கும் மேற்பட்ட விமானங்கள் வழக்கமான அட்டவணையின்படி இயக்கப்பட்டதாகவும் இண்டிகோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் திறன் பயிற்சி மூலம் 33 ஆயிரத்து 145 பேர் வெளிநாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளதாக மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆயிரத்து 90 பேர் வெளிநாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளதாக கூறினார்.

தொழில்நுட்ப பரிமாற்றங்கள், ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டங்கள் உள்ளிட்டவை தொடர்பாக ஆஸ்திரேலியா, டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் திறன் மேம்பாடு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதாகவும் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்தார்.

<<<<>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக தமிழகத்திற்கான சிறப்பு வாக்காளர் பட்டியல் பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

அதன்படி திரு. ராமன் குமார், திரு. குல்தீப் நாராயண், திரு. நீரஜ் கர்வால், திரு. விஜய் நெஹ்ரா ஆகிய நான்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அதிகாரிகள் மாநிலம் முழுவதும் நடைபெறும் கணக்கீட்டுப் பணி, உரிமை கோரல்கள், மறுப்புரை பெறும் காலம், அறிவிப்புக் கட்டம் மற்றும் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு ஆகிய அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக கண்காணிப்பார்கள் என்று மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்திற்கு டிசம்பர் மாதம் வழங்கப்பட வேண்டிய 7 புள்ளி மூன்று ஐந்து டி.எம்.சி. நீரை உச்சநீதிமன்ற உத்தரவின்படி கர்நாடக அரசு திறந்துவிடுவதை உறுதி செய்ய வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் காணொலி காட்சி வாயிலாக கலந்துகொண்ட மாநில நீர்வளத்துறை செயலாளர் திரு. ஜெயகாந்தன், இதனைத் தெரிவித்தார்.

கர்நாடக அரசு, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பிலும், உச்சநீதிமன்ற தீர்ப்பிலும் அங்கீகரிக்கப்படாத நீரேற்றுப் பாசன திட்டங்களை செயல்படுத்தி சாகுபடி செய்வதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதுதொடர்பான திட்ட விவரங்களைப் பெற வேண்டும் என்று மாநில நீர்வளத்துறை செயலாளர் வலியுறுத்தியதாக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற வழிவகுக்கும் புதிய பாடப்பிரிவுகளை தேர்ந்தெடுத்து அதனை கல்லூரிகளில் தொடங்குவது தொடர்பான கருத்துருக்களை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று கல்லூரி முதல்வர்களை மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று ராணி மேரி கல்லூரி, வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக்கல்லூரி, காயிதே மில்லத் அரசு கலைக் கல்லூரியில் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் கல்லூரி முதல்வர்களிடம் உரையாற்றிய அவர், அரசுத் திட்டங்களின் பயன்கள் அனைத்து மாணவர்களையும் சென்றடைய தேவையான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

09 12 2025 6 45 Kovi. Chezhiyan

தமிழகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் ஒரு பகுதியாக கணக்கீட்டுப் படிவங்களை சமர்ப்பிக்க நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

இதையொட்டி மாநிலம் முழுவதும் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் பெறப்பட்டு வருகிறது.

தென்காசி மாவட்டத்தில் இப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக ஆட்சியர் திரு. கமல் கிஷோர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

09 12 2025 6 45 Kovi. Chezhiyan

தைவானில் நடைபெற்ற ஆசிய உலகத் திறன் போட்டியில் இந்தியாவின் சார்பில் பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு மாநில அரசின் சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டன.

ரோபோட் சிஸ்டம் இண்டகரேஷன் திறன் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த தினேஷுக்கு 5 லட்சம் ரூபாயும், Software Application Development பிரிவில் திறன் பதக்கம் வென்ற கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. முகமது மஃபாசுக்கு 3 லட்சம் ரூபாயும் அளிக்கப்பட்டது.

துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இதற்கான காசோலைகளை வழங்கினார்.

09 12 2025 6 45 Kovi. Chezhiyan

*இருவரிச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிராக செயல்பட்ட தீவிரவாத அமைப்புகளை இங்கிலாந்து தடை செய்ததற்கு மத்திய அரசு வரவேற்று தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

ஆபரேஷன் சாகர் பந்து மூலம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு இந்தியா சார்பில் அனுப்பப்பட்ட மேலும் 700 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்கள் நேற்று திரிகோணமலையை சென்றடைந்தது.

**<<<<>>>>**

கைவினைக் கலைஞர்களுக்கான விருதை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்குகிறார்.

**<<<<>>>>**

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மார்கழி மாதத்தையொட்டி இம்மாதம் 16ஆம் தேதி முதல் அதிகாலை 3 மணிக்கு கோவில் நடை திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

தருமபுரி மாவட்டத்தில் நடப்பாண்டு கொடிநாள் நிதியாக ஒரு கோடியே 51 லட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. சதீஷ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் சரிபார்ப்பு பணி இம்மாதம் 11ஆம் தேதி தொடங்கும் என்று ஆட்சியர் திரு. இளம் பகவத் கூறியுள்ளார்.

<<<<>>>>

சீர்காழி அருகே திருவெண்காடு சுவேதாரன்யேஸ்வரர் சுவாமி கோவிலில் கார்த்திகை மாத சோமவாரத்தை முன்னிட்டு ஆயிரத்து எட்டு சங்காபிஷேகம் நடைபெற்றது.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களை மாநில அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார்.

<<<<>>>>

சென்னை தண்டையார்பேட்டையில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான மருத்துவ முகாம் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

இந்தியா, பிரேசில், ஸ்விட்சர்லாந்து, ஹாங்காங், தென்னாப்பிரிக்கா, கொரியா, மலேசியா, ஆஸ்திரேலியா, போலந்து, ஜப்பான், எகிப்து, ஈரான் ஆகிய 12 அணிகள் பங்கேற்கின்றன.

எக்ஸ்பிரஸ் அவென்யூ மற்றும் இந்தியன் ஸ்குவாஷ் அகாடமியில் இப்போட்டி நடைபெறுகிறது.

இந்தியா இன்று ஸ்விட்சர்லாந்தை எதிர்கொள்கிறது.

எக்ஸ்பிரஸ் அவென்யூவில் இப்போட்டி மாலை 6 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

இந்தியா - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கட்டாக்கில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

5 போட்டிகளைக் கொண்ட தொடரில் இரு அணிகளும் பங்கேற்கின்றன.

இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான இரண்டாவது ஹாக்கிப் போட்டி டிராவில் முடிவடைந்தது.

கேப்டவுனில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா 2 கோல் போட்டன.

3வது மற்றும் கடைசி போட்டி நாளை நடைபெறுகிறது.

<<<<>>>>

உலகக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் 9 முதல் 16வது இடத்திற்கான ஆட்டத்தில் இந்தியா இன்று உருகுவே-யை எதிர்கொள்கிறது.

**<<<<>>>>**